2011 ஜூன் 7] [திரு. பழ. கருப்பையா]

பிற்பகல் 2-00

ஒன்றரைச் சாண் பாயிலே முடங்கியிருக்கிற பாட்டாளி, ஒழுகாத வீட்டில் வாழ வேண்டுமென்பதற்காகத்தான் இந்தத் திட்டம் கொண்டு வரப்பட்டது என்கிறார் முன்னாள் முதலமைச்சர் அவர்கள். 75 ஆயிரம் ரூபாயிலே சுவர்கள்தான் எழுப்பலாம், மேற்கூரை போடமுடியாதே?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உரையை நாளை தொடரலாம். பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன.

பேரவை மீண்டும் நாளை (8-6-2011) புதன்கிழமை காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-00 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

1. சென்னை, தாம்பரம் (மேற்கு), திருவாளர்கள் இந்து மிஷன் மருத்துவமனைக்கு யாதொரு வணிகர், அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு பொருட்களின் விற்பனையின்மீது செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களித்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் (பி2) துறையின் 16-12-2010 ஆம் நாளிட்ட 208 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

2. நீலகிரி மாவட்டம், உதகமண்டலத்தில் உள்ள திருவாளர்கள் இந்துஸ்தான் போட்டோ பிலிம் தயாரிப்பு நிறுவனம் செய்யும் மருத்துவக் கதிர் படச்சுருள் (X-Ray) விற்பனை குறித்து செலுத்தத்தக்க மதிப்புக் கூட்டு வரி வீதத்தைக் குறைத்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் (பி2) துறையின் 23-12-2010 ஆம் நாளிட்ட 209 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட

அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

3. யாதொரு வணிகர், சேர்க்கை பொருட்களுடன் அல்லது சேர்க்கை பொருட்களின்றி பெட்ரோல் விற்பனை மீதான செலுத்தத்தக்க வரியை அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள நாள் முதல் குறைத்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் (பி2) துறையின் 1-3-2011 ஆம் நாளிட்ட 45 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

4. 2009 ஆம் ஆண்டு தமிழ்நாடு பேரூராட்சிகள், மூன்றாம் நிலை நகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் (காலிமனையிடங்களுக்குச் சொத்து வரி விதித்தல்) விதிகள் இயற்றியது குறித்து நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறையின் 20-8-2009 ஆம் நாளிட்ட 151 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304 (2) ஆம் பிரிவு, 1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1971) 432 (2) ஆம் பிரிவு, 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 25/1981) 431 (2) ஆம் பிரிவு, 1994 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1994) 11 (3) ஆம் பிரிவு, 1994 ஆம் ஆண்டு திருநெல்வேலி மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 28/1994) 11 (3) ஆம் பிரிவு, 1994 ஆம் ஆண்டு சேலம் மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 29/1994) 11 (3) ஆம் பிரிவு, 2008 ஆம் ஆண்டு திருப்பூர் மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 7/2008) 10 (3) ஆம் பிரிவு, 2008 ஆம் ஆண்டு ஈரோடு மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/2008) 10 (3) ஆம் பிரிவு, 2008 ஆம் ஆண்டு வேலூர் மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 26/2008) 10 (3) ஆம் பிரிவு, 2008 ஆம் ஆண்டு தூத்துக்குடி மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/2008) 10 (3) ஆம் பிரிவு ஆகிய பிரிவுகளின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]